இலவசபிரதி

Registered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-14 | 30-08-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-194



S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12426)

# மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க

# ஜே.வி.பி. 12 நிபந்தனைகள்!

## சுதந்திரக்கட்சியுடன் கூட்டில்லையாம்

(கொழும்பு)

**எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் தமது ஆதரவைப் பெறவேண்டுமாயின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ 12 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது. எனினும் சுதந்திரக்கட்சியுடன் எத்தகைய கூட்டிற்கும் செல்லப்போவதில்லையெனவும் தெரிவித்துள்ளது.**

இதில் பிரதான நிபந்தனைகளாக சுனாமி பொதுக்கட்டமைப்பை இல்லாது ஒழிக்க வேண்டும், அரச நிறுவனங்கள் மற்றும் கல்வியைத் தனியார் மயமாக்குவது நிறுத்தப்பட வேண்டும், என்பன உட்பட12 அம்சக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு பிரதமர் இணங்கினால் அவரை ஆதரிப்பதெனவும் இல்லை எனில் தாம் தனியான வேட்பாளரை நியமிக்கவுள்ளதாகவும் ஜே.வி.பியினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் எத்தகைய கூட்டிற்கும் செல்லப் போவதில்லை எனத் தெரிவித்துள்ள ஜே.வி.பி சனாதிபதித் தேர்தல் குறித்தே கவனத்தைச் செலுத்துவதாக தெரிவித்துள்ளது. (32)

## தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது முடிவுக்கு வரமுடியாத நிலையில் ஜே.வி.பி

### ராஜித சேனாரத்ன கருத்து

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்ற தீர்மானத்திற்கு கூட வர முடியாத நிலைக்கு ஜே.வி.பி உள்ளாகியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். மகிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இரண்டு வேட்பாளர்கள் சனாதிபதித் தேர்தலுக்கு தயாராகி விட்டனர்.ஆனால் ஜே.வி.பி இன்னும் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பதா என யோசித்துக் கொண்டிருக்கிறது.இந்த நிலையில் ஜே.வி.பியிடம் உள்ள சுமார் மூன்று இலட்சம் வாக்குகளும் குறைந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார். (32)

## நாகர்கோவிலில் இடம்பெறும் சம்பவங்கள் போர் நிறுத்தத்தை கேள்விக்குள்ளாக்கும்

### போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு எச்சரிக்கை

(கொழும்பு)

யாழ். நாகர்கோவில் பிரதேசத்தில் இடம்பெறுகின்ற சம்பவங்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஆபத்துக்குள்ளாக்கும் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு கவலை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் ஹெலன் ஒலப்ஸ்டொட்டிர் கருத்துத் தெரிவிக்கையில்; நாகர்கோவிலில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசத்துக்கும் படைத்தரப்பின் பிரதேசத்துக்குமான இடைவெளி மிகக் குறுகியது. இதர பகுதிகளில் இருதரப்பு பிரதேசங்களுக்கும் இடையே 600 மீற்றர் இடைவெளி இருக்கும். ஆனால் இங்கு மிகக் குறுகிய இடைவெளியே இருப்பதாகத் தெரிவித்தார். இதனால் இருதரப்பினருக்கும் இடையே அடிக்கடி முறுகல் நிலை ஏற்படுகிறது. இதனால் ஏற்படும் சிறு சிறு சம்பவங்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் நாட்டில் அமைதியை ஏற்படுத்தமுன் சொந்த மாவட்டத்தில் நீதியை நிலை நாட்டவேண்டும்

### - பிரதமரை சாடுகிறார் சஜித் பிரேமதாஸ

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தல் தொடர்பான வன்முறைகள் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆரம்பித்து விட்டதாக ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிறேமதாஸ தெரிவித்துள்ளார். -இலங்கையில் சனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெறுவதற்கான அறிவித்தல் வெளியாகியுள்ளது. இந்த வேளையில் தான் மனவருத்தத்தோடு ஒரு விடயத்தை கூறவேண்டும் எனக் குறிப்பிட்ட அவர் திஸ்ஸமஹாராம பன்னேகமுவ பிரதேசத்தில் அரச ஆதரவு கொலைகாரக் கும்பல் ஒன்று வன்முறைகளில் ஈடுபட்டு வருவதாகவும், குறிப்பாக பாதுகாப்புப் படையினர் மற்றும் ஆளும் கட்சி ஆதரவாளர் குழு ஒன்றும் ஐக்கியதேசியக் கட்சி ஆதரவாளர்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகளுக்கருகிலுள்ள காவலரண்களை அகற்றக்கோரி திருமலை மாணவர்கள் ஒருநாள் பகிஷ்கரிப்பு

(திருகோணமலை)

பாடசாலைகளுக்கு அருகில் படையினர் காவலரண்களை அமைத்து காவலில் ஈடுபட்டுள்ளதை ஆட்சேபித்து படையினரை விலக்குமாறு கோரி நேற்று திருகோணமலை நகரில் மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர். இதனால் தமிழ்ப் பாடசாலைகள் இயங்கவில்லை.

திருகோணமலை நகரில் பேருந்துநிலையம் அருகில் மே மாதம் 15 ஆம் திகதி சட்ட விரோதமாக புத்தர்சிலை ஒன்று நிறுவப்பட்டதைக் கண்டித்து திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவை ஐந்து நாள் தொடர் ஹர்த்தாலை மேற்கொண்டது. அதனையடுத்து திருகோணமலை நகரிலும், புறநகர்ப் பகுதிகளிலும் படையினர் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டனர். தமிழ்ப் பாடசாலைகளுக்கு அருகிலும் படையினர் காவலரண்களை அமைத்து நிறுத்தப்பட்டனர்..

இப்படையினரை விலக்கும்படி கோரிக்கை விடப்பட்டும் பலனளிக்கவில்லை. இந்தநிலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டு முன்னேற்பாடுகள் தீவிரம்



(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதா னத்தில் நாளைமறுதினம் நடைபெறவுள்ள தமிழ் தேசிய எழுச்சிப்பிரகடன மாநாடு சம்பந்தமான முன்னேற்பாடுகள்யாவும் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானம், அதனை அண்மித்தபகுதிகள் மற்றும் கிளி நொச்சி ஏ-9 நெடுஞ்சாலையின் இரு மருங்கும் தமிழ் தேசிய எழுச்சிக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு வருவதுடன் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு வருவதனையும் காணக்கூடியதாகவுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் சுடர் ஒளி அலுவலகம் மீது கைக்குண்டுத் தாக்குதல்கள்

### ஒரு ஊழியர் பலி; மூவர் காயம்

(கொழும்பு)

சுடர் ஒளி ஊடக இதழின் தலைமை அலு வலகமான கிராண்ட்பாஸ் மாவத்த வீதி அலுவலகத்தின் மீது இரண்டு கைக்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.இதன் போது பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்த டேவிட் செல்வரட்ணம் (வயது-50)என்பவர் படுகாய மடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

அச்சக அலுவலகத்தினுள் வீழ்ந்து வெடித்த இந்தக் கைக்குண்டுகளினால் மேலும் சுடர் ஒளி ஒப்புநோக்குநரான மாணிக்கம் கமலநாதன் (வயது-49)

(12ஆம் பக்கம் பார்க்க)

## சடலமாக மீட்கப்பட்டவர்கள் மட்டக்களப்பு இளைஞர்கள்


களுத்துறையில் சடலமாக மீட்கப்பட்ட இரு இளைஞர்களும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஏறாவூர் பகுதி சந்திவெளியைச் சேர்ந்த கந்தையா சசிக்குமார் (வயது-27) காத்தமுத்து நல்லதம்பி (வயது-30) ஆகியோரே கொல்லப்பட்டோர் என களுத்துறைப்பொலிசார் தெரிவித்தனர்.

கட்டுநாயக்க பகுதியிலிருந்து இனந்தெரியாத ஆயுதக் குழுவினரால் இவர்கள் கடத்தப்பட்டு கொடும் சித்

(12ஆம் பக்கம் பார்க்க)

## - மாயவனூர் கிருஷ்ணர் ஆலயத்தில் - கழுத்தில் வெட்டப்பட்ட நிலையில் இளைஞரொருவரின் சடலம்



(படம் - ரூபன்)

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாயவனூர் கிருஷ்ணர் ஆலய உள்வீதியில் கழுத்தில் வெட்டப்பட்ட நிலையில் இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; கணபதிப்பிள்ளை பிரபாகரன் (வயது-21 கல்மடுநகர், இராமநாதபுரம்) என்பவரே நேற்று மதியம் 1.45 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.கிருஷ்ணர் ஆலய வருடாந்த மகோற்சவம் நடைபெற்று இறுதி நாளான நேற்று திருக்கல்யாணத் திருவிழாவின்

(12ஆம் பக்கம் பார்க்க)

COMITE INTERNATIONAL GENEVE

## REQUEST FOR PROPOSAL

**Construction of medical shelters**

**Closing Date:** 05 of September 2005 **/10.00 hrs am**

The Sub-Delegation of the International Committee of the Red Cross (ICRC) in Kilinochchi is searching for construction companies willing to contract for the building of Medical shelters in Mullaitivu District (villages of Annamal Kovil, Valayarmadam Church, Sabaratnam Thoddam, Unnapulavu).

The project should start by **08th September 2005.**

### 1. Bill of Quantities

4 Semi- permanent Medical Shelters / Dimensions 30 X 20 Feet

| | |
|---|---|
| Walls : | 7 feet high concrete block-work |
| Pillars: | 9 pillars / height 7 feet / width: 8 inch |
| Windows : | 2 windows , 3 X 3 feet |
| Doors : | 1 wooden door, single side opening / 3 X 6 feet |
| Floor: | Concrete floor / 30 X 20 feet/ plastered |
| Roofing: | Kadjan |

### 2. Structure & Detail of the Proposal

a) Material: Detailed listing and quantification (both in volume & unit price) required
b) Labour: Separate listing and quantification (both in volume & unitprice)
c) Indication of project start & end dates
d) Indication of payment terms & warranty

Specific details of the project, including diagrammatic representation are available on request at the ICRC office in Kilinochchi.
The projects will be carried out under the strict supervision of the ICRC.

Interested Companies and individuals are invited to submit their bids in a **sealed envelope** (open envelopes shall not be considered at all) until 05th of September 2005 10.00 AM to the following address:

**International Committee of the Red Cross**
**Subdelegation Kilinochchi**
**Logistics Department**
**Iranamadu Junction**
**Kilinochchi**
**Phone ++94 712 375 697**

(சி.12651)



## கேள்வி அறிவித்தல்

**வீடமைப்பு, நிர்மாணத்துறை, கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சு**

## கட்டடங்கள் திணைக்களம்

01 யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் நிர்வாகப் பிரிவுக் கட்டட மேம்படுத்தலும், திருத்துதலுக்குமான சீலிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம், கடற்கரைவீதி, கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலக கேள்விச் சபைத் தலைவரால் 2005-09-09 ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை கோரப்படுகின்றன.

02 கேள்விப்பத்திரங்கள் 2005-09-05 ஆம் திகதி பி.ப. 3.30 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமான ரூபா ஆயிரம் மட்டும் (ரூபா 1000.00) செலுத்தி யாழ்ப்பாணம் கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

03 கேள்விகள் மூடப்பட்டவுடன் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அலுவலகத்தில் உடன் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

04 கேள்விதாரர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் (இக்டாட்) அபிவிருத்தி செய்யப்பட்ட நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் தேசிய பதிவு மற்றும் தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் தரம் எம். 8 மற்றும் அதற்குமேல் கட்டடநிர்மாண ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்துகொண்ட மற்றும் இலங்கை தேசிய நிர்மாண சங்க அங்கத்தவராயுமிருத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் பெறுமுன் ஒப்பந்தக்காரர் பதிவுப் புத்தகம் NCASL அங்கத்துவ அட்டை என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05 பொறியிடப்பட்ட கேள்விகள் நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் யாழ்ப்பாணம் கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்களம், மே/பா பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) கேள்விச் சபைத் தலைவருக்கு முடிவு நேரத்திற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.

06 தாமதப் பிணைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என கேள்விதாரர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

07 கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். அத்துடன் மேலதிக விபரங்கள் யாழ்ப்பாணம் கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். T.P: 021-2222781

W.S. மொல்லிகொட,
கட்டடங்கள் பணிப்பாளர்,
கட்டடங்கள் திணைக்களம்,
"செத்சிரிபாய"
ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே, பத்தரமுல்ல.


(சி.12652)





# சதாம் ஹுசைனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டால்

# சனாதிபதி பதவியை இராஜினாமாச் செய்வேன் -கலபானி



(பாக்தாத்)

**ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைனின் மீதான வழக்கில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டால் அந்தத்தீர்ப்பில் தாம் கைச்சாத்திடப் போவதில்லையென்றும் பதவி விலகப் போவதாகவும் ஈராக்கின் தற்போதைய சனாதிபதி கலபானி கூறியுள்ளார்.**

அல்அராபி தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில், தமது பதவிக் காலம் முடிவடைய முன்னர் சதாம் மீதான வழக்கு விசாரணை முடிவிற்கு வந்துவிடும் என்று கூறியுள்ளார். சதாம் ஹுசைன் மீதான வழக்கு விசாரணை இரண்டு மாத காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தநிலையில் குற்றங்களை விசாரிக்கும் பிரதம நீதியரசரையும் தமது சட்டத்தரணியையும் சதாம் ஹுசைன் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்துள்ளார். இதுவரை சதாம் ஹுசைனிற்கு எதிராக ஒரேயொரு வழக்கு மாத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



வரும் ஒக்ரோபர்15 இல் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு நிறைவேற்றப்படவுள்ள ஈராக்கின் அரசியல் சட்டத்தை தயாரித்த குழுவினர் இது பூர்த்தியானதை விழாவாகக் கொண்டாடவுள்ள நிலையில் நேற்றுமுன்தினம் புகைப்படம் ஒன்றிற்கு காட்சி அளித்தனர்.

# மூன்று மாடிக் கட்டடம் இடிந்தது மும்பையில் ஆறு பேர் உயிரிழப்பு

நேற்று முன்தினம் இரவு மும்பைநகரின் தெற்குப் பகுதியில் மென்ரோ சினிமா என்ற திரை யரங்கின்அருகில் இருந்த மூன்று மாடிக்கட்டடம் இடிந்து விழுந்ததில் ஆறுபேர் பலியாகியுள்ளனர்.

கட்டடஇடிபாடுகளில் சிக்கிய 13 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கட்டட இடிபாடுகள் முழுவதும் அகற்றப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரமும் மும்பை நகரில் நான்குமாடிக்கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் 10 பேர் பலியானதுடன் 40 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# தனக்கு வழங்கப்பட்ட சிறைத்தண்டனையை இரத்துச் செய்யுமாறு நேபாள பிரதமர் கோரிக்கை

(காத்மண்டு)

நேபாளத்தில் இலஞ்ச ஊழலில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டித் தனக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதைஇரத்துச் செய்யுமாறு அந் நாட்டு உச்ச நீதிமன்றத்திடம் முன்னாள் நேபாள பிரதம மந்திரி சேக் பகதூர் கியூபா கேட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் கட்டுப்பாட்டிற்கான றாயல் கமிஷனின் சட்ட அதிகாரத்தை எதிர்த்து மன்னர் ஞானேந்திராவினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட கியூபா உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு மூலம் சவால் விடுத்துள்ளார்.

கடந்த பெப்ரவரி முதலாம் திகதி நேபாளத்தில் மன்னர் அரசு அதிகாரத்தை கையேற்றிக்கொண்ட பின் இக் கமிஷன் நிறுவப்பட்டது.

கடந்த மாதம் இக் கமிஷன் கியூபாவிற்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 13 இலட்சம் டொலர் அபராதமும் விதித்தது.

தனது சொந்தக் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு 46 கோடி 40 இலட்சம் டொலர் காத்மண்டு தண்ணீர் விநியோகத் திட்டத்திற்கான ஒப்பந்தத்தை வழங்குமாறு அதிகாரிகளிடம் அவர் கூறியதாக இக் கமிஷன் குற்றம் சாட்டியிருந்தது.நேபாளத்தின் நெருங்கிய தோழமை நாடான இந்தியாவும் அமெரிக்காவும், அரசியல் தலைவர்களை சிறையில் அடைக்கும் முடிவை குறைகூறியுள்ளன.



மியாமியில் வெள்ளம் சூழ்ந்த வீதியூடாக தமது வாகனத்தைச் செலுத்தும் மக்கள்.

# பயங்கரவாத நடவடிக்கையை ஒழிப்பதற்கு இந்திய-ஆப்கான் தலைவர்கள் கூட்டுப்பிரகடனம்

(காபூல்)

பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழிப்பதற்கு இந்தியப்பிரதமர் மன் மோகன்சிங், ஆப்கானிஸ்தான் சனாதிபதி கமீர் கர்ஷாய் ஆகியோர் உறுதி வழங்கியுள்ளனர்.


இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு ஆப்கானிஸ்தான் சென்றுள்ள மன்மோகன்சிங் ஆப்கான் சனாதிபதியை சந்தித்து பயங்கரவாதத்தைஒழிப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்திய போதே இந்த உறுதியை வழங்கியுள்ளனர்.

இதன்போது பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு பாகிஸ்தான் இணைந்து செயற்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்த மூன்று நாடுகளும் ஒத்துழைப்புடன் செயற்படவேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

முப்பது வருடங்களுக்குப் பின்னர் இந்தியப்பிரதமர் ஒருவர் ஆப்கானிஸ்தான் சென்றுள்ளமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

லூசியானாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வீசிய கற்றினா சூறாவளிதாக்க விருப்பதாகக்கிடைத்த தகவலையடுத்து நியு ஓடியன்ஸ் நகரிலிருந்து வாகனங்கள் முண்டியடித்துக் கொண்டு பாதுகாப்பான இடம் நோக்கி நகருகின்றன.



# எட்டுக்கோடி தைக்கப்பட்ட ஆடைகளை விற்பனைக்கு விடுவதில் தொடந்தும் பேச்சுவார்த்தை

(பீஜிங்)

சீனாவிற்கும், ஐரோப்பிய சமூகத்திற்குமிடையே தைக்கப்பட்ட ஆடைகளின் வர்த்தகம் தொடர்பாக இரண்டு மாதகாலமாக இருந்துவரும் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் மேற்கொள்ளப்படும் பேச்சுக்கள் நேற்று ஐந்தாவது நாளாக பீஜிங்கில் ஆரம்பித்துள்ளன.

ஐரோப்பிய நாடுகளின் துறைமுகங்களின் களஞ்சியசாலைகளில் தேங்கியுள்ள எட்டுக்கோடி தைக்கப்பட்ட ஆடைகளை விற்பனைக்கு விடுவது சம்பந்தமான பிரேரணைகளை ஐரோப்பிய சமூகத்தின் பிரதிநிதி தயாரித்துள்ளார்.

யூன் மாதம் பத்தாம் திகதி கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஐரோப்பிய நாடுகளுக்கு சீனா ஏற்றுமதி செய்யக்கூடிய தைக்கப்பட்ட ஆடைகளின் எண்ணிக்கை ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளதனால் அதற்கு மேலதிகமாக சீனா அனுப்பி வைத்துள்ள தைக்கப்பட்ட ஆடைகளை ஐரோப்பிய சமூக சுங்க அதிகாரிகள் களஞ்சியசாலைகளில் தடுத்து வைத்துள்ளனர்.இருந்த போதிலும் களஞ்சியசாலைகளில் தேங்கியுள்ள சீனாவின் தைக்கப்பட்ட ஆடைகள் தொடர்பாகவும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

நெதர்லாந்து, டென்மார்க், சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகள் உடனடியாக இந்த ஆடைகளைச் சந்தைக்கு விடப்படாவிட்டால் தமது நகரங்களிலுள்ள விற்பனை நிலையங்களை மூட வேண்டி ஏற்படும் எனவும் பல்லாயிரக்கணக்கானோர் தொழில் வாய்ப்புக்களை இழந்துவிடுவார்கள் என்றும் தெரிவித்துள்ளனர்.

# ஆறுதரப்பு அணுவாயுத பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளப்போவதில்லை என வடகொரியா அறிவிப்பு

ஆறுதரப்பு அணுவாயுத பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளத் தயார் இல்லை என வடகொரியா கூறியுள்ளதாக தாய்லாந்து தெரிவித்துள்ளது.

வடகொரியாவின் அணுவாயுத சர்ச்சை தொடர்பான ஆறுதரப்பு பேச்சுவார்த்தைக்கு அந்நாடு இணங்கவில்லையாயினும் இந்தப்பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சீனா கூறியுள்ளது.

பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வரும் ஜப்பான், சீனா, அமெரிக்கா, ரஷ்யா, வடகொரியா மற்றும் தென் கொரியா என்பன பேச்சுவார்த்தைகள் நடைபெறும் எனத்தெரிவித் துள்ளன. எனினும் பேச்சுவார்த்தைக்கான திகதி இதுவரை குறிப்பிடப்படவில்லை.




தெற்கு இஸ்ரேலில் நேற்று முன்தினம் தற்கொலைத் தாக்குதல் இடம் பெற்ற பகுதியில் இஸ்ரேலியப் பொலிசார்.

# பாகிஸ்தான் உள்ளூர் தேர்தல் சனாதிபதி முஷாரப் கட்சி வெற்றி

பாகிஸ்தானில் நடைபெற்ற உள்ளூர் தேர்தல்களில் வெற்றி பெற்றுள்ளதாக சனாதிபதி பர்வேஷ் முஷாரப்பின் ஆதரவாளர்கள் உரிமை கோரியுள்ளனர். சனாதிபதி முஷாரப்பின் கட்சியான முஸ்லிம் லீக்கின் தகவல்படி தேர்தல் இடம் பெற்ற நான்கு மாகாணங்களில் இரண்டில் தமது கட்சிவெற்றி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்த தேர்தலின் இறுதி முடிவுகள் 2007 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலிலும் சனாதிபதியின் முஸ்லீம் லீக் கட்சி வெற்றிபெறும் என்ற செய்தியை தந்திருப்பதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது. எனினும் எதிர்க்கட்சிகள் நடந்து முடிந்த உள்ளூர் தேர்தலில் பாரிய ஊழல்கள் இடம் பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளன. (32)

## செய்தித்துறை அமைச்சர்கள் பங்கேற்கும் மாநாடு

சார்க் உறுப்பு நாடுகளின் செய்தித் துறை அமைச்சர்களின் மாநாடு நேற்று காத்மண்டுவில் ஆரம்பமானது. இந்த இரண்டு நாள் மாநாட்டினை மன்னர் ஞானேந்திரா ஆரம்பித்து வைத்தார்.

தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுவரும் அதிவேக முன்னேற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் முகமாக ஊடகங்களை தயார்படுத்துதல் போன்றவைபற்றியும் இதன் போது ஆராயப்படவுள்ளது.

# கிளி.தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டில் அனைவரும் உணர்வுடன் பங்கேற்போம்

## கிளி. கமக்கார அமைப்புக்களின் சம்மேளனம் அறைகூவல்

(விசுவமடு)

**கிளிநொச்சி மாவட்டத்தில் வரும் முதலாம்நாள் நடைபெறவிருக்கும் மாபெரும் தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடனத்தில் அனைத்து கமக்கார அமைப்புக்களைச் சார்ந்த பிரதிநிதிகள், மற்றும், விவசாயிகள் அனைத்து மக்களையும் எழுச்சியுடன் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் சு. மனோகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்: எமதுமக்கள் எழுச்சியை அனைத்து உலகமும்கண்டுவியக்க, எமது உரிமைப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ள, போராட்டத்தை அங்கீகரிக்க நாம் அனைவரும் திரண்டு வந்துள்ளோம்.

நாம் எல்லோரும் உணர்வுடன் எமது விடுதலையை வென்றெடுக்க புறப்பட்டுள்ளோம் என்றசெய்தியை உலகிற்குசொல்லத் தயாராக வேண்டும்.

எமது பிரதேசத்திலுள்ள அனைத்து துறையினரும் ஊழியர்கள், விவசாயிகள் மக்களென எவருமே வீட்டில்இருக்காது எமது விடுதலையை வென்றெடுக்கும் இந்த எழுச்சிப்பிரகடனத்தில் ஒன்று திளரவேண்டும்.

தற்போது இங்கு நெல் அறுவடைக்காலமாக இருக்கும்போதும் அதனைக்கூட ஒருநாள் இடைநிறுத்தி விட்டு 01.09.2005 இல் எமது தேச விடுதலையை வென்றெடுக்கும் எழுச்சிப் பிரகடனத்தில் கலந்துகொள்ளத் தயாராக வேண்டுமெனக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புக்களின் சம்மேளனம் தீர்மானம் எடுத்துள்ளது.

அந்தத் தீர்மானத்தை அனைவரும் ஏற்று எமது அங்கத்தவர்கள் மற்றும் அங்கத்துவ சங்கங்களும் நடைமுறைப்படுத்திஇந்த எழுச்சிப் பிரகடன மகா நாட்டைவெற்றிகரமாக நடத்த வேண்டும் எனவும் அனைவரும் இதற்கு அணிதிரள வேண்டும் எனவும் மேலும் அவர் கேட்டுள்ளார். (46)

முல்லை. மகாவித்தியாலயத்திற்கு

# தமிழீழ வைப்பகத்தினால் நூல்கள் அன்பளிப்பு



(படம்: சகிலா)

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவர்களின் கல்வி வளர்ச்சியினை மேம்படுத்தும் நோக்குடன் தமிழீழ வைப்பகத்தினால் ரூபா 50 ஆயிரம் பெறுமதியான நூல்கள் நூலகத்துக்கென முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 23 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முல்லை மகாவித்தியாலய அதிபர் செ. அல்பிரட் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை கரைதுறைப் பற்று கோட்டக் கல்வி அதிகாரி அன்ரனி ஜெயநாதன், தமிழீழ வைப்பக மேலாண்மை மேலாளர் ம. வீரத்தேவன் ஆகியோர் ஏற்றினார்கள்.

நிகழ்வில் கருத்துரைகளை அன்ரனி ஜெயநாதன், தமிழீழ வைப்பக மேலாண்மை மேலாளர் ஆகியோர் வழங்க, தொடர்ந்து நூலகத்திற்கான புத்தகங்களை வீரத்தேவன் முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபரிடம் வழங்கினார்.

இந் நிகழ்வின் போது சேமிப்பு பழக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடன் 153 மாணவர்களுக்கான வங்கிக் கணக்குப் புத்தகத்தினை வருகை தந்திருந்த தமிழீழ வைப்பக பிரதிநிதி, கரைதுறைப்பற்று கோட்டக் கல்வி அதிகாரி ஆகியோர் வழங்கினர். (20)

# இராணுவக் கெடுபிடியால் திருமலை விவசாயிகள் நெல்லைச் சந்தைப்படுத்த முடியாத நிலை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட விவசாயிகள் சிறுபோக நெற்செய்கையின்போது அறுவடை செய்த நெல்லை படையினரின் கெடுபிடி காரணமாக சந்தைப்படுத்த முடியாத அவலநிலையிலுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கட்டைப்பறிச்சான், தோப்பூர், சேருவில கிராமங்களில் வாழும் விவசாயிகள் தமது உற்பத்திப்பொருட்களை இராணுவச்சோதனைச் சாவடியூடாக எடுத்துச்சென்றே சந்தைப்படுத்த வேண்டும். இச்சோதனைச் சாவடியூடாக நெல்லை எடுத்துச் செல்வதற்குஇராணுவத்தினர் பல்வேறு இடையூறுகளை விளைவித்து வருவதோடு வாகனங்களில் முழு அளவில் எடுத்துச் செல்ல விடாது பகுதி அளவிலேயே எடுத்துச் செல்ல அனுமதிக்கின்றனர்.

இதனால் நல்ல விளைச்சல் கிடைத்தும் சந்தைப்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது. பெரும் போகத்தின்போதும் இவ்வாறான கெடுபிடிகளினால் விவசாயிகள் பெரும் நட்டமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (46)

## வவுனியாவில் இராணுவத்தினர் திடீர் சோதனைக்கெடுபிடி

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் காலை திடீர் சோதனை 'நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

திருநாவற்குளம் பகுதியில் இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வவுனியாவில் மேலும் சில பகுதிகளிலும், சனி இரவும் இத்தகைய சோதனை நடவடிக்கைகளை சிறிலங்கா இராணுவம் மேற் கொண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வன்னிக்குச் செல்கிற பல பாரவூர்திகள் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் தடுத்து வைக்கப்பட்டு இரு நாட்களாக இந்தப் பாரவூர்திகள் சிறிலங்கா இராணுவ அனுமதிக்காக நிறுத்தப்பட்டன.

வன்னியின் இயல்பு வாழ்க்கையைச் சீர்குலைக்கும் வகையில் சிங்கள இராணுவம் மேற் கொண்டு வரும் இத்தகைய நடவடிக்கைக்கு மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

- செம்மலை, செம்மலை கிழக்கில் -

## சுனாமியால் பாதிக்கப்பட்டோரின் 120 குடியிருப்புக்களுக்கு சூரிய மின்கலம்

சுனாமியினால் பாதிக்கப்பட்ட செம்மலை, செம்மலை கிழக்கு மக்களுக்கு சீற் நிறுவனத்தினால் நடைமுறைத்தப்பட்ட இரண்டாம் கட்ட வேலைத்திட்ட நிறைவும் மேற்படி நிறுவனத்தினரால் வேலைத் திட்டத்தை பார்வையிடலும், 120 குடியிருப்பு மக்களுக்கு சூரிய மின்கலம் வழங்கல் நிகழ்வும் செம்மலை கிழக்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த 24 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு செம்மலை கிராம அலுவலர் வ.புஸ்பராசா தலைமையில் இடம்பெற்ற. நிகழ்வில் மங்கல விளக்கினை சீற் நிறுவனத்திற்கு நிதி, வழங்கிய கொடக் நிறுவன பிரதிநிதி, ஜேர்மன் பிரதிநிதி லூசியா ஆகியோர் ஏற்றினார்கள். தமிழீழத் தேசியக் கொடியினை கடற்புலிகளின் அளம்பில் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் ஏற்றினார்.



(படம்: சகிலா)

நிகழ்வில் கருத்துரைகளை செம்மலை கிழக்கு ஊரக கிளைத் தலைவர் நா. மயில்வாகனம் கொடக் பிரதிநிதி, செம்மலை ஊரக மேம்பாட்டுத் திட்டத்தினைச் சேர்ந்த மா. உதயகுமாரன், சீற் நிறுவனப் பிரதிநிதி நீதன் ஆகியோர் வழங்கினார்கள். (20)

# காலபோக பயிர்ச்செய்கை தொடர்பாக கமக்கார அமைப்புக்களுடன் சந்திப்பு

(பூநகரி)

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சகலகமக்கார அமைப்புக்களுடன் காலபோகப் பயிர்ச்செய்கை தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது.

கறுக்காய்த்தீவு கமக்கார அமைப்பு விவசாயிகளிற்கு கறுக்காய்த்தீவு ம.வி இல் கமக்கார அமைப்புத் தலைவர் சிவப்பிரகாசம் தலைமையில் அண்மையில் கூட்டம் நடைபெற்றது.

இதேபோன்று கடந்த செவ்வாய்க்கிழமை செட்டியகுறிச்சி, கொல்லங்குறிச்சி. இடங்களில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் காலபோகப் பயிர்ச்செய்கைத் தீர்மானங்கள் கமக்காரர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள். காவற்கொட்டில்களின் அவசியம் என்பன பற்றிய பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இதில் பெரும்பாக உத்தியோகத்தர் சுந்தரமூர்த்தி, பூநகரிப்பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் சதீஸ்,விவசாய விரிவாக்க அலுவலர், கிராம சேவையாளர், விவசாயிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து எதிர்வரும்15ஆம் திகதி வரைஏனைய இடங்களிலுள்ள கமக்கார அமைப்புக்களுடனும் சந்திப்பு நடைபெறவுள்ளது. (34)

# கிளி. வணிக வாரப் போட்டிகளில் பரிசில்கள் பெறுவோர் விபரம்

( அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பிரதேச பாடசாலைகளுக்கிடையிலானவணிக வார நிகழ்வு கடந்த 23ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

மேற்படி வணிக வாரப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற போட்டியாளர்களதும் பாடசாலைகளினதும் பெயர் விபரங்கள் பின்வருமாறு.

**பட்டி மண்டபம்**

முதலாமிடம் கிளிநொச்சி முருகானந்தா ம.வி.,இரண்டாமிடம் கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி மூன்றாமிடம் கிளி/ இராமநாதபுரம் ம.வி.

**சிறந்த பேச்சாளா**

கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரிசெல்வி பராஜசிங்கம் சுபாசினி.

**எழுத்துப்பரீட்சை கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் கிளி/ மத்திய கல்லூரி, செல்வன் செல்வராசா தயானந்தன்.இராண்டாமிடம் கிளி/ புனித திரேசா பெண்கள்கல்லூரி செல்வி கஸ்தூரி.மூன்றாமிடம் கிளிநொச்சி மகா வித்தியாலயம் பாலச்சந்திரன் தனதீபன்

**எழுத்துப் பரீட்சை மேற்பிரிவு**

முதலாமிடம் கிளி/ மத்திய கல்லூரி குமாரசங்கரப்பிள்ளை கேதீகா, இரண்டாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாலயம் நந்தினி பரஞ்சோதி, மூன்றாமிடம் (நால்வர்) நல்லைநாதன் கங்காயினி கிளி/ மத்திய கல்லூரி,சபாரட்ணம் ரஜீப்அக்கராயன் மகா வித்தியாலயம், கனகசபை கஜீபரன் இந்துக்கல்லூரி, விஜிதா பத்மநாதன் கிளி.மகா வித்தியாலயம்.

**கட்டுரைப்போட்டி**

முதலாமிடம் கிளி/ மத்திய கல்லூரி செல்வன் பத்பநாதன் ஹரிப்பிரதாஸ்இரண்டாமிடம்கிளி/ தருமபுரம் மகா வித்தியாலயம் இ.ராசையா துவாரகா மூன்றாமிடம் கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி கதிரமலை ஜேம்ஸ் ஜோசபின்.

**பேச்சுப்போட்டி மேற்பிரிவு**

முதலாமிடம் புனித திரேசா பெண்கள் கல்லூரி கதிரமலை ஜேம்ஸ் ஜோசபின். இரண்டாமிடம் கிளி/இந்துக்கல்லூரி செல்வி நிலோஜினி ராம்சின் மத்யூஸ் மூன்றாமிடம்கிளிநொச்சி மகாவித்தியாலயம் தர்சா சிவராசா

**பேச்சுப்போட்டி கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் கிளி/இந்துக்கல்லூரி, திரவியச் செல்வம் சிறிரஜீவன், இரண்டாமிடம் கிளி/ மத்திய கல்லூரி செல்வி தாட்சாயினி பரமேஸ்வரன், மூன்றாமிடம்(இருவர்) கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி செல்வி கஸ்தூரி , பளை மத்திய கல்லூரி செல்வி பிருந்தா,

**விநாடி வினா போட்டி கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் பளை மத்திய கல்லூரி, இரண்டாமிடம் (இரு பாடசாலைகள்) கிளி/ மத்திய கல்லூரி கிளி/ இந்துக்கல்லூரி

விநாடி வினாப் போட்டியில் சிறந்த போட்டியாளர்செல்வன் திரவியச் செல்வம் சிறிரஜீபன் (கிளி/ இந்துக்கல்லூரி)

**வினாடி வினா மேற்பிரிவு**

முதலாமிடம் (இரு பாடசாலைகள்) கிளி/மகா வித்தியாலயம், கிளிநொச்சி இந்துக்கல்லூரி, மூன்றாமிடம் கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**சிறந்த போட்டியாளர்**

செல்வி தர்சிகா வேலாயுதம் கனகபுரம் மகா வித்தியாலயம்)

**குறுக்கெழுத்துப்போட்டி**

முதலாமிடம் கிளிநொச்சி மகா வித்தியாலயம் செல்வி ரஜீபனா ராககுலசிங்கம்.இரண்டாமிடம் (நான்கு பாடசாலைகள்) கிளிநொச்சி மகா வித்தியாலயம், செல்வி தனுசியா கணேசன் , செல்வி தர்சா சிவராசா, செல்வி விஜிதா பத்மநாதன்,கிளிநொச்சி இந்துக்கல்லூரி, செல்வன் திரவியச்செல்வம் சிறிரஜீவன் கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயம் செல்வி தர்சிகா வேலாயுதம்,கிளிநொச்சி மத்திய கல்லூரி செல்வி கங்காயினி நல்லை நாதன்

**காட்சிப்படுத்தல்**

முதலாமிடம் கிளிநொச்சி மத்திய கல்லூரி, பங்குச்சந்தை.

இரண்டாமிடம் கிளிமத்திய கல்லூரி தொடர்பாடல், மூன்றாமிடம் கிளி/ இந்துக்கல்லூரி, கிராமிய அபிவிருத்தி வங்கியின்செயற்பாடு. (சோ)

# அவசரகாலச்சட்டத்தைக் காரணம் காட்டி தமிழ்மக்கள் வேட்டையாடப்படுகின்றனர்

## பாராளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ்

(தென்மராட்சி)

**அவசரகாலச் சட்டத்தை காரணம் காட்டி மீண்டும் இலங்கையில் தமிழ் மக்கள் வேட்டையாடப்படுகின்றனர் என சாவகச்சேரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமகால அரசியல் கருத்தரங்கில் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் தெரிவித்தார்.**

இந்த நிலை தொடரும் எனில் யுத்தநிறுத்த உடன்பாடு கேள்விக்குள்ளாகும், தொடர்ந்தும் பொது மக்கள், போராளிகள், சிறிலங்கா அரச படைகளால் கைது செய்யப்படுவதை அனுமதிக்க முடியாது

இலங்கையில் மீண்டும் அவசரகாலச் சட்டத்தைச் சிறிலங்கா அரசாங்கம் கொண்டு வந்துள்ளது. இதன் மூலம் சமாதான உடன்படிக்கைகள் மீறப்பட்டிருப்பதுடன் மீண்டும் இலங்கை முழுவதும் தமிழ் மக்கள் அச்சுறுத்தலுக்கும், கொலை மிரட்டல்களுக்கும் ஆளாகியுள்ளனர். இராணுவத்தினரின் வீதிரோந்துகள், தேடுதல் நடவடிக்கைகள் யுத்த காலத்தை மீண்டும் தமிழ்மக்களுக்கு நினைவூட்டுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

# நிறப்பட அடையாள அட்டை வழங்க குடாநாட்டில் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலும் நிறப்படங்களுடன் கூடியதேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கு யாழ். மாவட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிறப்படங்களுடன் கூடிய தேசிய அடையாள அட்டைகளை அடையாள அட்டைக்குப் புதிதாக விண்ணப்பிப்போர் மட்டுமன்றி ஏற்கனவே கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களுடனான அடையாள அட்டைகளை வைத்திருப்போரும் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிறப்படங்களுடனான தேசிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்கு வழமையான தேசிய அடையாள அட்டைகளுக்குரிய அளவிலான விண்ணப்ப புகைப்படங்கள் ஐந்து மற்றும் சான்றிதழ்களின் உண்மைப் பிரதிகளுடன் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் கிராம அலுவலர்கள் மூலமும், பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபர்களூடாகவும் விண்ணப்பிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# சட்ட விரோத மின்சார பாவனை

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் சட்ட விரோத மின்சாரம் பெறுவோர் தொகை அதிகரித்து வருவதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் நிரந்தர மின் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் இதனால் வலுக்குறைந்த மின்சாரத்தையே மின்சாரம் பெறுவோர் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது .(28)

# ஆறு பாடசாலைகளின் அபிவிருத்திக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சி கல்வி வலயத்திலுள்ள ஆறு பாடசாலைகளைத் தெரிவு செய்து அப் பாடசாலைகளின் வகுப்பறை வசதிகளை மேம்படுத்திக் கொடுக்க ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் பாதுகாப்பு நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கைதடி சேது காவலர் வித்தியாலயம், நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயம் அல்லாரை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, சாவகச்சேரி சக்தி அம்மன் பாடசாலை, மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம் மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, ஆகிய ஆறு பாடசாலைகளினதும் வகுப்பறை வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன.

பின் தங்கிய பிரதேசப் பாடசாலை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை, வளப் பற்றாக்குறையுடன் இயங்கி வரும் பாடசாலை என்ற முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டே இவ் வகுப்பறை மேம்பாட்டு திட்டத்தினுள் இவை ஈர்க்கப்பட்டதாக தென் மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி, றெஜினா இருதயநாதன் கூறியுள்ளார். (33)

# தமது குடியிருப்புக்களை விடுவிக்குமாறு படையினரிடம் பொது அமைப்புக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாக் கரையோரமாகப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களின் குடியிருப்புக்களை மக்கள் மீளக்குடியமர வசதியாக விடுவிக்குமாறு குருநகர் பகுதி பொது அமைப்புக்கள், யாழ். மாவட்ட படைத்தலைமையிடம் கோரியுள்ளன.

1996 ஆம் ஆண்டு முதல் குருநகரின் கரையோரப் பகுதிகள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு உயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ளன. வீடுகளும், மத வழிபாட்டுத் தலங்களும் இப்பகுதியினுள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இங்கு மீளக் குடியமர அனுமதிக்கப்படாத குடும்பங்கள், அரச காணிகளிலும், ஏனைய கரையோரப்பகுதிகளிலும் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றன. இவ்வாறு அரச காணிகளில் வாழ்ந்து வரும் மக்களையும், அங்கிருந்து வெளியேறுமாறு அரச அதிகாரிகள் நிர்ப்பந்தித்து வருவதையடுத்தே , தம்மைச் சொந்த இடங்களில் குடியமர நடவடிக்கை எடுக்குமாறு கோரிவருகின்றனர்.

இதே வேளை அண்மையில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த இறங்கு துறையொன்றை மீனவர்களது பயன்பாட்டிற்கு விடுவித்தது போன்று, மக்கள் குடியிருப்புக்களையும், விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது. (27)

# தெல்லிப்பழை ப.நோ.கூ சங்கத்தில் கூட்டுறவாளர்கள் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தொடர்ச்சியாக இருபத்தைந்து வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களும் பொதுச்சபை உறுப்பினர்களாக இருந்தவர்களும் நேற்று முன்தினம் கௌரவிக்கப்பட்டார்கள்

சங்கத்தலைவர் சி. சிவமகாராசா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சங்க ஊழியர்கள் தங்கப்பதக்கம் அணிவித்தும் ஏனைய பொதுச் சபை உறுப்பினர்கள் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டனர்

இந் நிகழ்வில் யாழ் .அரசாங்க அதிபர் கே. கணேஸ் வலிவடக்குப் பிரதேச செயலாளர் க.முரளீதரன் யாழ் கூட்டுறவுத் திணைக்கள அலுவலர் க.கனகசபாபதி யாழ். கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி மக்கள் வங்கி காங்கேசன் துறை கிளை முகாமையாளர் பொன்.கணேசமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர். (41)

# கொக்குவில் இந்துக்கல்லூரியில் சிறுவர் அபிவிருத்தி ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

சிறுவருக்கான அபிவிருத்தி நிலையத்தின் ஒன்று கூடல் நிகழ்வு நேற்று முன்தினம் பகல் கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் சீ.வீ.கே சிவஞானம் தலைமையில் இடம் பெற்றது.

நிலையத்தின் செயலாளர் க.பாலதயானந்தன் உரையாற்றும் போது எதிர் காலத்தில் தாய்தந்தையரை இழந்து நிற்கும் பிள்ளைகளுக்கு மேலும் பல உதவிகளை வழங்க வேண்டிய தேவைகள் இருக்கின்றன.இதனை நாம் ஒரு ஒழுங்கமைப்பின் மூலமே செய்ய வேண்டும் இந்தவகையில் பிள்ளைகளுடைய பாதுகாவலர்களும் தங்களுடைய உண்மையான நிலைமையை எடுத்துக் கூற வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில் பிள்ளைகளுடைய பேச்சுக்கள் நடனங்கள் நாடகங்கள் என்பனவும் இடம் பெற்றன.

கடந்த காலத்தில் போரினால் பெற்றோர்களை இழந்த பிள்ளைகளுக்கு இவ் அமைப்பு உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (41)

# சீட்டிழுப்பு பிற்போடல்

யாழ். பல்கலைக்கழக அனைத்து விடுதிகள் மாணவர் ஒன்றியத்தினரால் விடுதிகளில் தங்கியிருந்து கல்விகற்கும் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சி நிதிக்காக எதிர்வரும் சனிக் கிழமை நடத்தப்பட இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பானது தவிர்க்க முடியாத காரணத் தினால் பிற்போடப்பட்டுள்ளது. இச்சீட்டிழுப்பு ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி நடைபெறு மென அறிவிக்கப்பட்டுள்ளது.

# "தார்" கொள்வனவு செய்வதற்கு நிதிப்பற்றாக்குறை பெரும்பிரச்சினை

## -வீதி அபிவிருத்தி அதிகாரசபை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தாரினை கொள்வனவு செய்வதற்கு நிதிப்பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை கூறியுள்ளது.

வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான தாரினை கொள்வனவு செய்வதற்கான நிதி ஒதுக்கீட்டினை அரசு உரிய காலப் பகுதியில் வழங்காமையினாலேயே இந்த நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளது என்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை கூறியுள்ளது.

இதன்காரணமாக யாழ். குடாநாட்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுவரும் வீதி அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பணிகள் பெரும் பாதிப்படைந்துள்ளன.

இதைவிட சில வீதிப்புனரமைப்பு பணிகள் இடைநடுவிலேயே கைவிடப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். இந் நிலைமை தொடர்ந்தால் வீதி அபிவிருத்தி பணிகள் பல முடக்கம் அடையும் அபாயம் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளார். (33)

# முல்லையில் நெல் கொள்வனவிற்கு 50 மில்லியன் நிதி கிடைத்தது

(விசுவமடு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள விவசாயிகளிடமிருந்து 2005 சிறுபோகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லை கொள்வனவு செய்ய 75மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் 50 மில்லியன் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவற்றிடமிருந்து ஒரு கிலோ அரிசியை 32 ரூபா விலையில் கொள்வனவு செய்ய ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரச செயலக திட்டப்பணிப்பாளர் சி. குணசிங்கம் தெரிவித்துள்ளார். (46)

# சண்முகானந்தா வித்தியாலயத்தில் இரவில் தங்கும் படையினர்

(தென்மராட்சி)

கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயத்திற்கு இரவில் படையினர் சென்று தங்கி வருவதாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

பாடசாலையின் சுவர் ஏறிக்குதித்து உள் நுழையும் படையினர் இரவு முழுவதும் அங்கு தங்கிவிட்டு காலையிலேயே அங்கிருந்து வெளியேறுகின்றனர்.

படையினரின் இந்த நடவடிக்கை காரணமாக பாடசாலை மாணவர்களும் அப்பகுதி பொதுமக்களும் அச்சம் கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக பாடசாலை அபிவிருத்தி சங்கத்தால் போர்நிறுத்தக் கண்கா்ணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது, (28)

# திருமலை சம்பூரில் 9 குளங்கள் புனரமைப்பு

(திருமலை)

பத்தாயிரம் குளங்கள் அபிவிருத்தி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டம் சம்பூர் பிரதேசத்தில் ஒன்பது குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இத்தகவலை பொருண்மிய மேம்பாட்டு நிறுவன திருகோணமலை மாவட்டப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.


# இந்தியருக்கு பாக். நீதிமன்றம் தூக்குத் தண்டனை

## அமைதி முயற்சிகளுக்குச் சமாதி?

இந்தியா- பாகிஸ்தானிடையே நீறு பூத்த நெருப்பாக இருந்து வரும் அமைதிக்கு குந்தகம் ஏற்படும் (?) போல் தான் நிலைமைகள் இருக்கின்றன. இரு நாடுகளும் அமைதி எனும் போர்வையை போர்த்திக்கொண்டு கைகுலுக்கி கொஞ்சக்காலம் கூட செல்லவில்லை அந்த அமைதி காணாமல் போய் விடுமோ... எனும் அச்சம் தான் இப்போது தலைதூக்கி இருக்கின்றது.

இதற்குக் காரணம் பாகிஸ்தான் நீதிமன்றம் இந்தியர் ஒருவருக்கு தூக்குத் தண்டனை விதித்துள்ளமை தான்! இதனால் இந்திய தரப்பு குமுறல் நிலையில் இருக்கின்றது. மத்தியரசுக்கு பல விதமான நெருக்கடிகள் சூழ்ந்துள்ளன. இதனை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்று பிரதமர் மன்மோகன்சிங் முதல் சோனியா காந்தி வரை கலக்கத்திலிருக்கின்றனர் என்பது தெளிவு. இதனால் தான் பாகிஸ்தான் பிரதமர் உள்துறை அமைச்சு வெளியுறவுத்துறை அமைச்சு என்று இந்தியத் தரப்பிலிருந்து தொலைபேசி, தொலைநகல் என்று நாலா பக்கமிருந்தும் இந்தியரை விடுதலை செய்யுமாறு பறந்த வண்ணமிருக்கின்றன.

ஆனால் பாகிஸ்தான் தரப்போ நீண்ட மௌன விரதம் காத்துக்கொண்டிருக்கின்றது. நீதிமன்ற தீர்ப்பில் தலையிட



மன்மோகன் சிங்

முஷாரப்

முடியாது என்பதுபோல் தான் அசட்டையாக இருப்பதாக இந்தியத் தரப்பு கலக்கத்தை சுமந்து கொண்டிருக்கின்றது.

இதனால் தான் இதுவரை இரு நாடுகளும் கட்டிக் காத்து வரும் அமைதி "சாண் ஏற முழம் சறுக்கலாகி விடும்" என்று பல வித அச்ச ரேகை ஓடத் தொடங்கி இருக்கின்றது.

பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்தவர் சரப்ஜித்சிங். இவர் 1990 ஆம் ஆண்டு பஞ்சாப்பை அண்டியுள்ள பாகிஸ்தான் பிரதேசத்தில் சர்வதேச எல்லைக் கோட்டுப் பகுதியில் வைத்து பாகிஸ்தான் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

இவர் மீது பாகிஸ்தான் பொலிசார் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் இரண்டே இரண்டு தான். ஆனால் இரண்டும் மிகப் பெரியளவிலான குற்றச்சாட்டுக்கள் என்பதால் இவருக்கு தூக்குத்தண்டனை தீர்ப்பாகியிருக்கின்றது.

அந்த வகையில் பாகிஸ்தான் பொலிசார் இந்தியர் சரப்ஜித்சிங் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள்,

*. பாகிஸ்தான் எல்லையில் நின்று பாகிஸ்தானை உளவு பார்த்த இவர் இந்திய உளவு நிறுவனமான 'ரோ'வின் உறுப்பினர்.

*. பாகிஸ்தானில் தொடர்ச்சியாக மூன்று இடங்களில் (லாகூர் பைசலாபாத் முல்தான்) வெடித்த குண்டு வெடிப்புகளுக்கும் இவருக்கும் தொடர்புண்டு.

யா/தெ/2474 திரு. கந்தையா திருநாவுக்கரசு
யா/தெ/2485 திரு. சண்முகம் பொன்னுத்துரை
யா/தெ/2487 திரு. முருகேசு சண்முகராசா
யா/தெ/2494 திரு. சின்னத்தம்பி இராசையா
யா/தெ/2499 திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
யா/தெ/2506 திரு. கணபதிப்பிள்ளை கந்தசாமி
யா/தெ/2525 திருமதி. மனோன்மணி கனகசபை
யா/தெ/2527 திரு. சின்னத்தம்பி சுந்தரம்
யா/தெ/2543 திரு. கந்தையா குலசேகரம்
யா/தெ/2548 திருமதி. பானுமதி சுந்தரலிங்கம்
யா/தெ/2563 திரு. செல்லப்பா துரைரட்ணம்
யா/தெ/2564 திரு. செல்லப்பா துரைரட்ணம்
யா/தெ/2580 திரு. வேலுப்பிள்ளை இராசரத்தினம்
யா/தெ/2600 திரு. இளையதம்பி இராசதுரை
யா/தெ/2605 திரு. தம்பையா மகாலிங்கம்
யா/தெ/2614 திரு. வைரவி கந்தையா
யா/தெ/2621 திரு. கணபதிப்பிள்ளை சிவஞானசுந்தரம்
யா/தெ/2625 திரு. வேலாயுதபிள்ளை செல்லையா
யா/தெ/2629 திருமதி. பவளக்கண்மணி குணரத்தினம்
யா/தெ/2650 திரு. வீரகத்தி சிவகுரு
யா/தெ/2660 திரு. வல்லிபுரம் நடராசா
யா/தெ/2662 திரு. முருகேசு வேலாயுதன்
யா/தெ/2664 திரு. தம்பு ஆறுமுகம்
யா/தெ/2667 திரு. இளையதம்பி இராசரத்தினம்
யா/தெ/2676 திரு. சிவகுரு துரைராசா
யா/தெ/2677 திரு. ஆறுமுகம் கனகசபாபதி
யா/தெ/2686 திரு. முத்துத்தம்பி கதிர்காமநாதன்
யா/தெ/2734 திரு. செல்லையா சிவசுப்பிரமணியம்
யா/தெ/2770 திரு. மார்க்கண்டு சிவபாலசிங்கம்
யா/தெ/2775 திருமதி. இராசம்மா சுப்பிரமணியம்
யா/தெ/2786 திரு. இளையதம்பி பொன்னுத்துரை
யா/தெ/2787 திரு. அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை
யா/தெ/2788 திரு. சின்னத்தம்பி சின்னத்துரை
யா/தெ/2799 திரு. வேலாயுதபிள்ளை சண்முகநாதன்
யா/தெ/2804 திரு. சரவணை அருளம்பலம்
யா/தெ/2811 திரு. சங்கரப்பிள்ளை கதிரித்தம்பி
யா/தெ/2824 திரு. கணபதிப்பிள்ளை சிவப்பிரகாசம்
யா/தெ/2827 திரு. வைரமுத்து மயில்வாகனம்
யா/தெ/2832 திரு. கந்தையா சிவசுப்பிரமணியம்
யா/தெ/2834 திரு. சின்னத்தம்பி கனகசுந்தரம்
யா/தெ/2836 திரு. ஆறுமுகம் ஆசைப்பிள்ளை
யா/தெ/2839 திருமதி. சிவபாக்கியம் அமரசிங்கம்
யா/தெ/2840 திருமதி. ஞானேஸ்வரி பத்மநாதன்
யா/தெ/2852 திரு. தில்லையம்பலம் இரத்தினம்
யா/தெ/2853 திரு. வீரகத்தி தாமோதரம்பிள்ளை
யா/தெ/2854 திரு. வேலுப்பிள்ளை தனபாலசிங்கம்
யா/தெ/2884 திரு. கதிரேசு விசுவநாதன்
யா/தெ/2889 திருமதி. பூரணம் தங்கவடிவேல்
யா/தெ/2898 திருமதி. மகேஸ்வரி நடராசா
யா/தெ/2899 திரு. மயிலர் அந்தோனிப்பிள்ளை
யா/தெ/2902 திரு. தம்பையா கிஸ்ணபிள்ளை
யா/தெ/2913 திரு. வன்னியன் வேலாயுதம்
யா/தெ/2924 திரு. நாகமணி பரதராசா
யா/தெ/2965 திரு. சின்னத்தம்பி இரத்தினம்
யா/தெ/2972 திரு. பூதப்பிள்ளை சோமசுந்தரம்
யா/தெ/2988 திரு. தம்பையா சபாபதிப்பிள்ளை
யா/தெ/3000 திரு. கதிரித்தம்பி வேலாயுதபிள்ளை
யா/தெ/3005 திரு. வல்லிபுரம் மயில்வாகனம்
யா/தெ/3027 திரு. செல்லத்துரை அரியரத்தினம்
யா/தெ/3036 திரு. சின்னத்தம்பி தருமலிங்கம்
யா/தெ/3058 திரு. கதிர்காமர் கந்தையா
யா/தெ/3061 திரு. தம்பையா செல்வநாயகம்
யா/தெ/3063 திரு. இராசநாயகம் ஞானநாயகம்
யா/தெ/3065 திருமதி. அன்னரட்ணம் சிவராசா
யா/தெ/3113 திரு. சின்னவன் வேலாயுதம்
யா/தெ/3133 திரு. வயிரவி பெரியதம்பி
யா/தெ/3150 திரு. வல்லிபுரம் சிவகுருநாதன்
யா/தெ/3164 திரு. காசிப்பிள்ளை கயிலைநாதன்
யா/தெ/3167 திருமதி. தர்மலட்சுமி வல்லிபுரம்
யா/தெ/3171 திரு. செல்லையா சிவபாதசுந்தரமூர்த்தி
யா/தெ/3173 திரு. செல்லையா சிவபாதசுந்தரமூர்த்தி
யா/தெ/3188 திரு. வயித்திலிங்கம் சோமசுந்தரம்
யா/தெ/3193 திரு. நடராசா சற்குணம்
யா/தெ/3196 திரு. சின்னத்தம்பி தெட்சணாமூர்த்தி
யா/தெ/3197 திரு. சபாபதி கந்தசாமி
யா/தெ/3203 திருமதி. பரமேஸ்வரி செல்வநாயகம்
யா/தெ/3209 திரு. வேலுப்பிள்ளை இராசையா
யா/தெ/3214 திரு. பிரான்சிஸ் இராசேந்திரம்
யா/தெ/3230 திருமதி. முத்துப்பிள்ளை மார்க்கண்டு
யா/தெ/3236 திருமதி. நாகேஸ்வரி உருத்திரமூர்த்தி
யா/தெ/3245 திரு. சின்னக்குட்டி பொன்னம்பலம்
யா/தெ/3266 திருமதி. பார்வதி தம்பிஐயா
யா/தெ/3277 திரு. நவரத்தினம் துரைசிங்கம்
யா/தெ/3314 திரு. சின்னத்துரை தர்மலிங்கம்
யா/தெ/3325 திரு. செல்லப்பா செல்லையா
யா/தெ/3341 திரு. தியாகராஜா பண்டிதவரதன்
யா/தெ/3366 திரு. பண்டாரம் கந்தையா
யா/தெ/3367 திரு. கந்தையா நடராசா
யா/தெ/3370 திரு. சூசைப்பிள்ளை பெனடிற்ஆசிர்வாதம்
யா/தெ/3396 திரு. கந்தையா வைரமுத்து
யா/தெ/3409 திரு. நாகராசா கந்தசாமி
யா/தெ/3438 திரு. சுப்பிரமணியம் சண்முகராஜா
யா/தெ/3443 திருமதி. கமலாபதி இராமநாதன்
யா/தெ/3458 திரு. தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்
யா/தெ/3460 திரு. மார்க்கண்டு தம்பிப்பிள்ளை
யா/தெ/3463 திரு. கந்தவனம் அம்பலவாணர்


(தொடரும்)

# ஆஷஸ் நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

# அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது இங்கிலாந்து







அவுஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற நான்காவது ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

129 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த இங்கிலாந்து ஏழு விக்கெட்டுக்களை இழந்து பெரும் தடுமாற்றத்தை எதிர்நோக்கியது.

சுழல்பந்து வீச்சாளர் ஷேண்வோர்ன் வேகப்பந்து வீச்சாளர் பிரெட்லீ ஆகியோர் ஏழு விக்கெட்டுக்களை கைப்பற்றி இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களை பிரமிப்பில் ஆழ்த்தினர்.

எவ்வாறாயினும் அஸ்லி ஹைல்ஸ், மத்தியு ஹொக்காட் ஆகியோர் இங்கிலாந்தின் வெற்றியை உறுதி செய்தனர்.

இங்கிலாந்து சார்பாக ரெஸ்கொதிக் 27 ஓட்டங்களையும் பிளின்டொப் 26 ஓட்டங்களையும், ஸ்ரோஸ், பீற்றர்சன் ஆகியோர் தலா 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஷேன்வோர்ன் 31 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களையும், பிரெட்லீ 51 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.


இங்கிலாந்து தனது முதலாவது இனிங்சில் 477 ஓட்டங்களையும், அவுஸ்திரேலியா முதலாவது இனிங்சில் 218 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்சில் 387 ஓட்டங்களையும் பெற்றது.

இரண்டாவது இனிங்சில் துடுப்பாட்டத்தில் லாங்கர் 61 ஓட்டங்களையும், சைமன் கட்றிச் 59 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் 56 ஓட்டங்களையும், ரிக்கிபொன்டிங் 48 ஓட்டங்களையும், ஷேன்வோன் 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ஹார்மிஷன் மூன்று விக்கெட்டுக்களையும், பிளின்டொப், ஹைல்ஸ், ஹொக்காட் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக இங்கிலாந்தின் அன்ரூபிளிண் டொப் தெரிவானார்.

மேற்படி வெற்றி மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் 2-1 என்ற நிலையில் இங்கிலாந்து அணி முன்னிலையிலுள்ளது. ஒரு போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றேயாக வேண்டும். இல்லையெனில் தொடர் இங்கிலாந்திடம் சென்றுவிடும்.









## பொண்டிங், கட்றிச்சுக்கு அபராதம்



இங்கிலாந்து அணிக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட்டின்போது கிரிக்கெட் ஒழுக்க விதிகளை மீறினார்கள் என்ற குற்றச்சாட்டில் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கிபொண்டிங், சைமன் கட்றிச் ஆகியோருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஓட்டம் ஒன்றை பெற முயற்சித்தபோது ஆட்டமிழந்ததை தொடர்ந்து நிதானத்தை இழந்த பொண்டிங் இங்கிலாந்து வீரர்களுடன் காரசாரமான வார்த்தை பிரயோகங்களில் ஈடுபட்டதால் அவருக்கு போட்டிக் கொடுப்பனவில் 75 வீத அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை போட்டியின்போது மிகவும் காரசாரமாக செயற்பட்டதற்காக சைமன் கட்றிச்சுக்கு 50 வீத அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தையிட்டு ரிக்கிபொண்டிங் மன்னிப்பு கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் நடந்து கொள்வது முறையற்றது


மெக்ராத்

இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் நடந்து கொள்ளும் முறை சரியில்லை. அவர்கள் அதிகமாக ஓய்வினைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்று அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர் மெக்ராத் தெரிவித்துள்ளார்.

ஆனால், அவ்வாறு நடக்கவில்லை எனவும், எங்களது வீரர்கள் விதிகளுக்கு அமைவாகவே நடந்து வருகின்றார்கள் என்றும் இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், சைமன் ஜோன்சுக்கு காயம் ஏற்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதாலேயே அவருக்கு பதிலாக மேலதிக வீரர் சேர்க்கப்பட்டதாகவும் மைக்கல் வோன் தெரிவித்துள்ளார்.

விளையாட்டு

## இறுதி டெஸ்ட் போட்டியில் இரண்டில் ஒன்று பார்ப்போம்


- பொண்டிங்

அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத் ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியிலும் விளையாடுவது சந்தேகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவருக்கு ஏற்பட்ட உபாதை இன்னமும் குணமடையவில்லை என அணித்தலைவர் ரிக்கிபொண்டிங் தெரிவித்துள்ளார்.

மெக்ராத் கலந்து கொள்கின்றாரோ இல்லையோ இரண்டிலொன்று பார்ப்பதற்கு இப்போது அவுஸ்திரேலிய அணி தயாராகியுள்ளதாக பொண்டிங் தெரிவித்துள்ளார்.

செப்ரெம்பர் மாதம் எட்டாம் திகதி அந்தப் போட்டி ஆரம்பமாகின்றபோது நாங்கள் சிறப்பான முறையில் விளையாடுவோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறும் கால்பந்து அரையிறுதிப் போட்டிகள்

வவுனியா பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படும் காற்பந்து வெற்றிக்கிண்ணத்திற்கான போட்டிகள் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இப்போட்டியில் அரையிறுதிப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளது.

மாலை நான்கு மணிக்கு நடைபெறும் முதலாவது அரையிறுதிப் போட்டியில் யங்ஸ்ரார் அணியை எதிர்த்து யுனிபைட் அணி மோதவுள்ளது. இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் அல்மதார் அணியை எதிர்த்து மருதநிலா அணி மோதவுள்ளது.

இந்தப் போட்டியின் இறுதியாட்டங்கள் எதிர்வரும் நான்காம் திகதி நடைபெறவுள்ளது.

### கால்பந்து பயிற்சிப்பட்டறை

வவுனியா பிரதேச செயலகத்தினர் எதிர்வரும் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் கால்பந்துப் பயிற்சிப்பட்டறை ஒன்று நடத்தப்படவுள்ளது.

வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ள மேற்படி பயிற்சிப் பட்டறையில் வவுனியாவைச் சேர்ந்த அனைத்து விளையாட்டுக்கழகங்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்ளலாம் என்று வவுனியா பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

## வீடியோகான் முக்கோண ஒருநாள் போட்டி

## இந்திய அணிக்கு 161 ஓட்ட வெற்றி



சிம்பாப்வேயில் நடைபெற்று வரும் வீடியோகான் மும்முனை கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது போட்டியில் சிம்பாப்வே அணியை 161 ஓட்டங்களால் தோற்கடித்துள்ளது. இந்தியா. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் முகமட் கைப் 65 ஓட்டங்களையும், தோனி 56 ஓட்டங்களையும், யுவராஜ்சிங் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

95 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை ஒரு கட்டத்தில் இழந்த இந்திய அணியை கைப்பின் நிதானமான ஆட்டம் ஓட்டக்குவிப்புக்கு உதவியது.

இப்போட்டியில் சேவாக் இணைத்துக்கொள்ளப்படவில்லை. பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய சிம்பாப்வே 24.3 ஓவரில் 65 ஓட்டங்களைப்பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் பதான், அஜித் அஹக்கர் வேகமாக விக்கெட்டுக்களை கைப்பற்றி இந்தியாவின் வெற்றியை இலகுபடுத்தினர். பதான் ஐந்து விக்கெட்டுக்களையும் அஹக்கர் நான்கு விக்கெட்டுக்களையும் ஹர்பஜன்சிங் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக இர்பான்பதான் தெரிவானார்.

## டெவன்போர்ட் மீண்டும் முதலிடத்தில்


நியுகெவனில் நடைபெற்ற பெண்களுக்கான டென்னிஸ்போட்டித் தொடரில் லின்சேடெவன்போர்ட் அமலி மௌறிஸ்மோவை 6-4,6-4 என்ற செட்கணக்கில் வெற்றிபெற்றதையடுத்து மீண்டும் தரவரிசையில் முதலாமிடத்தை தக்கவைத்துள்ளார்.

29 வயதான டெவன்போர்ட் அண்மைக்காலமாக காயத்தினால் அவதிப்பட்டதுடன், போட்டிகளில் கலந்து கொள்ளாதிருந்தார்.இது தொடர்பாக அவர்கருத்துத் தெரிவிக்கும்போது; இந்த வெற்றி தனக்கு மகிழ்ச்சியளிப்பதாகவும் நேற்று ஆரம்பமான அமெரிக்க ஓபன் டென்னிஸில் பங்குபற்ற இதன் மூலம் வாய்ப்பை பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மௌறிஸ்மோ இதுவரை 11 போட்டிகளில் பங்குபற்றி பத்து போட்டிகளிலும் இறுதிப்போட்டியில் வெற்றிபெறவில்லை என வருத்தம் தெரிவித்துள்ளார்.

டெவன் போர்ட் கடந்த மாதம் நடைபெற்ற விம்பிள்டன் தொடரில் வீனஸ் வில்லியம்சிடம் அரையிறுதிப்போட்டியிலும் அவுஸ்திரேலிய ஓபன் தொடரில் செரினாவில்லியம்சிடமும் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிந்தனைக்கு



ஆயிரமாயிரம் போராளிகளின் அற்புதமான தியாகத்தில் உருவாகிவரும் எமது தாயகத்தை ஒரு உன்னதமான - மேன்மையான- சமுதாயமாக மாற்றியமைக்க வேண்டும்.

தமிழீழ தேசியத்தலைவர்

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 30.08.2005
தொலைபேசி 060-2213244 மின் அஞ்சல்
தொலைநகல் 021-2283948 natham23 ela@ yahoo.com

## ராஜபக்ஷ எங்கே செல்வார்!

சனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதற்கான கால எல்லையோ அன்றி சனாதிபதித் தேர்தலுக்கான திகதியோ அறிவிக்கப்படவில்லை. ஆயினும், தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது.

எதிர்க்கட்சித்தலைவரான ரணில் விக்கிரமசிங்க சனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தையும் ஆரம்பித்துவிட்டார். இதேசமயம், சிறிய கட்சிகள், சிறுபான்மை இனக்கட்சிகளுடன் தேர்தல் பேரங்களில் அவரது கட்சி ஈடுபட்டிருப்பினும் பெரிதாக அது வெளிப்படுத்தப்படுவதாக இல்லை. அதாவது பரபரப்பற்ற நிலையில் அந் நடவடிக்கை தொடர்கின்றது. இதற்கு இம்முறை தேர்தலில் வெற்றி கொள்ள முடியும் என்ற அபரிமிதமான நம்பிக்கையே காரணமாக இருத்தல் கூடும். ஆகையினால் பதற்றமின்றி பணிகள் தொடர்கின்றன எனலாம்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியினதும், தற்போதைய ஆளும் கூட்டணியின் வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷவின் நிலை அவ்வாறானதாக இல்லை. நெருக்கடி மிகுந்ததாகவும், முடிவுகள் எதுவும் மேற்கொள்ள முடியாத வகையிலும் அவரது நிலை உள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சனாதிபதி வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டவேளையிலேயே, ஜே.வி.பி.யுடன் கூட்டு எதுவும் வைத்துக்கொள்ளுதல் கூடாது என தற்போதைய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா எச்சரித்திருந்ததாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்நிலை தற்பொழுதும் தொடர்வதாகவே உள்ளது.

ஆனால், மகிந்த ராஜபக்ஷவோ தனது வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்வதானால், ஜே.வி.பி.யுடன் கூட்டு வைத்துக் கொள்ளுதல் வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவராக உள்ளார். இதன் காரணமாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், சனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில், கருத்து வேறுபாடுகள் உருவாகும் அளவில் நிலைமை வளர்ச்சிகண்டு வருகிறது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனான முரண்பாடு ஒரு புறமிருக்க, பிரதான எதிர்க்கட்சியும் போட்டி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவின் கட்சியுமான ஐக்கிய தேசியக் கட்சியோ, சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ போர்நிறுத்தம், சமாதான உடன்பாடு, குறித்துத் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டுமென வலியுறுத்தி வருகின்றது. இது மகிந்த ராஜபக்ஷவிற்கு ஒரு வகையில் நெருக்கடியைத் தோற்றுவிக்கும் ஒன்றாகவே உள்ளது.

ஏனெனில், சனாதிபதி வேட்பாளர் மகிந்தராஜபக்ஷ சனாதிபதி சந்திரிகாவின் வழியைப் பின்பற்றுவதானால் யுத்தநிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பதற்குப் பூரண ஆதரவு எனவும் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் எனவும், பேச்சுக்குத்தானும் கூறிக்கொள்ள வேண்டும். ஆனால் தனது விருப்பத்திற்கு ஏற்ப ஜே.வி.பி.யுடன் கூட்டு எதையும் வைத்துக்கொள்வதானால், அவரால் பேச்சுக்குத்தானும் யுத்தநிறுத்தத்தைத் தொடர்வது பற்றியோ, சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது பற்றியோ பேசுதல் முடியாது.

ஏனெனில், மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதெனில், ஜே.வி.பி. தெளிவான சில நிபந்தனைகளை முன்வைத்துள்ளது. இதன் பிரகாரம் தேசிய இனப்பிரச்சினைகள் தொடர்பாக ஜே.வி.பி தயாரிக்கும் கொள்கைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் உடன்பாட்டில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கையொப்பம் இடுதல் வேண்டும் என்பது முக்கியமானதாகும். ஆனால் மகிந்த ராஜபக்ஷவினால் இது இலகுவில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்குமா? என்பது கேள்விக்குரியதே.

ஏனெனில் இது ஒரு புறத்தில் , ஜே.வி.பியின் கொள்கைப் பிரகடனத்தின் அடிப்படையில் மகிந்த ராஜபக்ஷ சனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதாக இருக்கும். இது சனாதிபதி சந்திரிகாவினாலோ அன்றி சுதந்திரக்கட்சித் தரப்பினாலோ ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருக்கும் என கூறிவிடுதல் முடியாது. மற்றொரு புறத்தில் சமாதானத்திற்கும், யுத்தநிறுத்தத்திற்கும் எதிரான நிலைப்பாட்டுடன் தேர்தலை எதிர்கொள்ள முடியுமா? என்ற கேள்விக்கும் விடைகாண வேண்டியிருக்கும்.

இவை தவிர ஜே.வி.பி மற்றுமொரு நிலைப்பாட்டையும் முன்வைப்பதாக உள்ளது. அதாவது ஜாதிக ஹெலஉறுமயவுடன தேர்தல் கூட்டு ஒன்று முன்வைக்கப்படுமானால் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கப்போவதில்லை என்பதே அதுவாகும். அதாவது மகிந்த ராஜபக்ஷ தமது கொள்கையின் அடிப்படையிலும் தமது வியூகத்தின் அடிப்படையிலும் போட்டியிட வேண்டுமென ஜே.வி.பி விரும்புகின்றது. சனாதிபதித் தேர்தலில் ஆறு கடக்கும் வரை அண்ணன் தம்பி என்ற நிலைப்பாட்டுடன் தேர்தல் வெற்றிவரை வேட்பாளர்கள் செயற்பட முடியும். கடந்த காலத்தில் இதற்கான எடுத்துக்காட்டுகளும் உண்டு. ஆயினும் ஜே.வி.பி.யின் நிபந்தனைக்கு உட்படின் மகிந்த ராஜபக்ஷவை தேர்தலுக்கு முன்னதாகவே கேவலப்படுத்துவதாகிவிடும். அத்தோடு சமாதானத்தின் விரோதியாகவும் யுத்தத்தின் ஆதரவாளராகவும் சித்திரிக்கப்பட்டும் விடுவார்.

இந்த நிலையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது நிலையை வெளிப்படுத்தவேண்டியதொரு காலகட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறார் எனில் மிகையாகாது. ஆனால், இது தொடர்பான தீர்மானத்தை அவர் இலகுவில் எடுத்துவிட முடியாது. இது அவருக்கு ஒரு சோதனைக்காலமாகவே இருக்கும்.




# சோதிடம் பார்க்கச் சென்ற மகிந்தவிற்கு அதிர்ச்சிச் செய்தி

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி வேட்பாளராக சுதந்திரக் கட்சியால் அறிவிக்கப்பட்டிருக்கும் மகிந்த ராஜபக்ஷ தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டிருந்தாலும் தான் கேட்டுவந்த ஆருடத்தால் ஆடிப்போய் இருப்பதாக சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

தென்னிலங்கையில் தேர்தல் வந்தால் சோதிடர்களுக்கு மகிழ்ச்சி தான். பெருந்தலைகள் பேரணியாய் படையெடுக்கும். இந்த வரிசையில் மகிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் காலியில் உள்ள புகழ்பெற்ற சோதிடர் ஒருவரை தனது குடும்பத்தினருடன் சென்று சந்தித்துள்ளார்.

சம்பிரதாய வரவேற்புக்கள் முடிந்த பிறகு மகிந்த ராஜபக்ஷ நேரடியாக சோதிடரிடம் கேட்டிருக்கிறார் நான் சனாதிபதியாக வரமுடியுமா என்று. ஆனால், சோதிடரோ எப்போது சனாதிபதி தேர்தல் நடைபெறப் போகிறது என்று, உங்களால் சொல்ல முடியுமா என கேள்வி எழுப்பினார்.

மகிந்த ராஜபக்ஷ அதற்குப் பதிலளிக்காமல் எப்போது தேர்தல் நடந்தால் தான் சனாதிபதியாக வர முடியும் என்று கேட்டுள்ளார். மேலும் இந்த ஆண்டு தேர்தல் நடந்தால் தான் பாரிய வெற்றியடைந்து விடுவேன் என்று சிலர் கூறியதாகவும் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த சோதிடர் தேர்தலை 2006ஆம் ஆண்டு நடத்துவதற்கான வழிவகை செய்ய முடியுமா எனக் கேள்வி எழுப்ப ராஜபக்ஷவோ முடியாது என்று தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு தேர்தல் நடந்தால் எனக்குக் கேடாக முடியுமா? என்று மீண்டும் மகிந்த வருத்தம் தோய்ந்த குரலில் கேட்க, வெளிப்படையாக சோதிடர் பதிலளித்துவிட்டார். யூன் 2006ஆம் ஆண்டு வரை உங்களுக்கு அரசியலில் இறங்கு முகம்தான் என்று கூறியதோடு அனுர பண்டாரநாயக்கவை சனாதிபதி வேட்பாளராக தேர்தலில் போட்டியிட வைப்பதே சரியானது என்றும் அறிவுரை கூறியுள்ளார்.

அதற்கு மறுத்துப் பேசிய ராஜபக்ஷவிடம், கண்டிப்பாக நீங்கள் தோற்றுவிடுவீகள். குறைந்த பட்சம் ஒரு வாக்குவித்தியாசத்திலாவது நீங்கள் தோல்வியடைவது உறுதி என்று கூறியுள்ளார். அத்துடன் உங்களது ரேகைகள் இப்போது வெற்றிக்குரியதாக இல்லை. கண்டிப்பாக 2008ஆம் ஆண்டுவரை நீங்கள் காத்திருக்க வேண்டும். அப்போதுதான் வெற்றிபெற முடியும். அதுவரை அனுர பண்டாரநாயக்க ஆட்சிப் பொறுப்பில் இருக்கட்டும் என்று கூறியுள்ளார்.

ஆனால், சோதிடரின் கூற்றை மறுத்த ராஜபக்ஷ, தான் வெற்றி பெறுவதற்கான எல்லா வழிகளும் மேற்கொள்ளப்பட்டுவிட்டது என்றும், தனக்குப் போட்டியாளரான ரணில் விக்கிரமசிங்கதான் அடுத்த சனாதிபதி ஆவாரா என்றும் கேட்டுள்ளார்.

நண்பர் ஒருவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க ரணில் விக்கிரமசிங்கவின் சோதிட வரைபடத்தைத்தான் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவார் என்றும், 2006ஆம் ஆண்டு அவருக்கு லாபகரமான ஆண்டு என்றும் கூறியுள்ளார்.

1994ஆம் ஆண்டு காமினி திசாநாயக்கவும், வஜிர அபயவர்த்தனவும் தன்னிடம் வந்ததாகவும் அவர் போட்டியிலிருந்து விலக வேண்டும் என்றும் தான் கூறியதாகவும் ஆனால், அவரோ தான் தோல்வியடையமாட்டேன் என்றும் அத்துடன் தன்னுடைய சோதிட நட்சத்திரங்கள் தனக்குப் பாரிய வெற்றியைத் தரும் என்று நம்புவதாகவும் கூறிச் சென்றார். அவர் மரணமடையாமல் இருந்திருந்தால் கண்டிப்பாக அந்தத் தேர்தலில் படுதோல்வியைச் சந்தித் திருப்பார் என்றும் மகிந்த ராஜ பக்ஷவிடம் சோதிடர் தெரிவித்தார்.

வருத்தத்தை தவிர முகத்தில் வேறு எதையும் வெளிப்படுத்த இயலாத மகிந்த ராஜபக்ஷ நீங்கள் சுதந்திரக் கட்சி ஆதரவாளர் எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுள்ளார்.

ஊடகங்களில் சோதிடக் கருத்தை தெரிவித்து புகழ்பெற்ற சோதிடராகிய நீங்கள் தேர்தல் நடைபெறும் வரை எனக்கு ஆதரவாக கருத்து எழுதுங்கள் என்று மகிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளார்.

ஆனால், சோதிடரோ தான் சுய மரியாதை உள்ளவன் என்றும், செய்கிற தொழில் மீது நம்பிக்கை உள்ளவன் என்றும் ஒருபோதும் அதற்குத் துரோகம் செய்யமாட்டேன் என்று கூறியதோடு, மூன்று மாதங்கள் உங்களுக்காக நான் பொய் சொல்லலாம். ஆனால், தேர்தல் முடிவுகள் வரும்போது என் கூற்று பொய்யாகிவிடும். அப்போது என் மீதான மக்கள் நம்பிக்கையும் வீணாகி விடும் என்று கூறி கண்டிப்புடன் மறுத்துவிட்டார் சோதிடர்.

அதனால், வேறு வழியின்றி தோல்வி பயம் உள்ளத்தில் குடி கொண்டிருக்க வெளியே புன்னகையுடன் வலம் வருகிறார் சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ.

## தேர்தல் வெற்றியை இலக்கு வைத்து ஆளுங்கட்சி பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றத்திற்கு நடவடிக்கை

தேர்தலை இலக்காக் கொண்டு சிறிலங்கா பொலிசாரை தங்களின் அரசியல் தேவைகளுக்காக இடமாற்றும் செயற்பாடுகள் தொடங்கியுள்ளன.

தற்போது வடமேல் மாகாண பொலிஸ் நிலையங்களில் பணியாற்றும் சில பரிசோதகர்களை வேறு நிலையங்களுக்கு இடம் மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அப்பகுதிப் பொறுப்பதிகாரிகள் கூறுகின்றனர்.

தேர்தலின் போது தமக்கு கட்டுப்படும் பொறுப்பதிகாரிகளை வைத்துக் கொண்டு ஏனைய நிலையங்களின் பொறுப்பதிகாரிகளை இடம் மாற்றும் நடவடிக்கைகள் முக்கிய பிரதியமைச்சரின் தலைமையில் நடைபெறுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலைமை குறித்து பொலிஸ் ஆணைக்குழுவிற்கும் பரிசோதகர்கள் குழுவிற்கும் எழுத்து மூலம் முறைப்பாடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அடுத்த சிறிலங்கா பொலிஸ் மா அதிபராக வருவதற்கு ஆசைப்படும் ஒரு பிரதி பொலிஸ் மா அதிபர் இத்தகைய செயற்பாடுகளுக்கு உதவிவருவதாகவும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் விசனத்துடன் குறிப்பிட்டனர்.

## விதை உருளைக்கிழங்கு தேவையானோர் உடன்பதிவு செய்யக் கோரிக்கை

2005/2006 ஆம் ஆண்டு காலப்போகத்தில் உருளைக்கிழங்கு, நெல் ஆகிய பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தங்களுக்குத் தேவைப்படும் விதை உருளைக் கிழங்கு, நெல் ஆகியவற்றின் இனம், அளவு போன்ற விபரங்களை நாளை 31 ஆம் திகதிக்கு முன்னர், தங்கள் பகுதி கமநலசேவை நிலையங்களில் பதிவுகளை மேற்கொள்ளும்படி யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது. இவ்வாண்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விதை உருளைக் கிழங்குகள் தருவிக்கப்படும் என்றும் அது அறிவித்துள்ளது.

# கதிர்காமர் கொலைகுறித்த பொலிசாரின் விசாரணை

# இராணுவம் மீது குற்றம் சுமத்தும் வகையில் அமைகிறது

## - இராணுவத்தரப்பு கடும் அதிருப்தி

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கு விசாரணையில் புதிய திருப்பமாக கதிர்காமரின் மனைவி சுகந்தி கதிர்காமரிடம் ஏன் இதுவரை விசாரணை நடத்தவில்லை என்று சிறிலங்கா இராணுவத்தினர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கதிர்காமர் கொலை வழக்கு விசாரணையை நடத்தி வரும் குற்றப்புலனாய்வுத்திணைக்களம் பாதுகாப்பு குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி இராணுவத்தினர் மீது குற்றம் சாட்டி வருவதாக இராணுவத்தரப்பினர் கூறுகின்றனர்.

அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்களே கதிர்காமரின் இல்லப் பாதுகாவலர்களாக இருந்துள்ளனர். கடந்த 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆம் திகதி முதல் பொலிசாரிடமிருந்து பாதுகாப்புப் பிரிவிற்கு இப்பொறுப்பு மாற்றப் பட்டுள்ளது. பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த இருவர் கொலை நடந்த போது கதிர்காமரின் இல்லவாயிற்கதவு முன்பு இருந்துள்ளனர்.

கதிர்காமரின் அருகாமை இல்லமான தளையசிங்கம் வீட்டில் நான்கு நாட்கள் கொலையாளிகள் தங்கியிருந்தே இச்சம்பவத்தை நிகழ்த்தியுள்ளனர் என்று கூறப்படும் நிலையில் பாதுகாப்புப் பிரிவினர் அந்த நான்கு நாட்களும் எந்தவித நடவடிககையையும் மேற்கொள்ளாமல் இருந்தது ஏன்? என்று பொலிஸ் தரப்பினர் கேள்வி எழுப்புகின்றனர்.

இந்நிலையில் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தோர் மீது கதிர்காமரின் துணைவியார் சுகந்தி கதிர்காமர் பலமுறை பொலிசாரிடம் புகார் செய்துள்ளார். மேலும் கதிர்காமர் சுட்டுக்கொல்லப்பட்ட போது அவருடன் இருந்தவர் சுகந்தி கதிர்காமர். அப்படியானால் அவரை விசாரணைக் குட்படுத்தி இருக்க வேண்டும். ஆனால் குற்றப்புலனாய்வுப்பிரிவினர் இதுவரை விசாரணைக்குட்படுத்த வில்லை. 25 இராணுவ கொமாண்டோக்களை விசாரணைக்குள்ளாக்கியிருக்கும் பொலிசாரால் ஏன் சுகந்தி கதிர்காமரை விசாரணைக்குட்படுத்த முடியவில்லை? என்று இராணுவத் தரப்பினர் விசனமடைந்துள்ளனர்.

இராணுவத்தின்மீது குற்றம் சுமத்தும் நோக்கத்திலேயே பொலிசாரின் விசாரணை திட்டமிட்டு நடத்தப்படுகிறது என்றும் இப்படியான திட்டமிட்ட குற்றச்சாட்டில் விசாரணைக் குட்டுத்தப்பட்ட ஒரு இராணுவ கொமாண்டோ விசாரணையின்போதே வெளிநடப்புச் செய்துவிட்டார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கதிர்காமர் கொல்லப்படுவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்பாக அவரது இல்லம் வீடியோப் படம் எடுக்கப்பட்டதாக செய்திகள் வெளியானது. இது குறித்த அனைத்து விவரங்களையும் தனக்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவிடம் கதிர்காமர் கோரியிருந்தார். இது தொடர்பான விவரங்களையும் சந்திரா பெர்னாண்டோ கதிர்காமரிடம் கொடுத்துள்ளார். ஆனால் இது தொடர்பில் மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. என்றும் கூறப்படுகிறது.

இராணுவத்தின் மீது குற்றம் சுமத்தும் வகையிலேயே பொலிசாரின் விசாரணை இருப்பதாக இராணுவத்தரப்பு கடும் அதிருப்தியில் இருக்கிறது.

# கொழும்பில் தமிழர்களுக்கு மீண்டும் பொலிஸ் பதிவு

(கொழும்பு)

கொழும்பில் தங்கியுள்ள தமிழர்கள் குறித்து மீண்டும் பொலிசாரால் பதிவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

குறிப்பாக வெள்ளவத்தைப் பகுதியில் வாடகைக்கு குடியிருப்போரின் விபரங்களை வெளியிடும் படிவங்கள் வீடுகளுக்கு விநியோகிக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படிவத்தில் பெயர், பிறப்பிடம், தொழில்புரியும் இடம், பயன் படுத்தும் வாகனம், தங்கியிருப்பதற்கான காரணம் உள்ளிட்ட விடயங்கள் கோரப்பட்டுள்ளதாக குடியிருப் பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் மீண்டும் பொலிசார் பதிவு நடவடிக்கைகளை ஆரம்பித் துள்ளமை குறித்து தமக்கு எதுவும் தெரியாது என பதில் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு வெள்ளவத்தைப் . பகுதியில் இவ்வாறான படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதையடுத்து மலையக மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பி. ராதாகிருஸ்ணன் இது குறித்து அமைச்சரை தொடர்பு கொண்டபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அமைச்சர், பொலிசாரால் விநியோகிகக்கப்பட்டுள்ள படிவத்தை தமக்கு தொலைநகலில் அனுப்புமாறு கேட்டுகொண்டதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். வெள்ளவத்தைப் பொலிசார் இது தொடர்பாகத் தெரிவிக்கையில், நாடு முழுவதிலும் இவ்வாறான படிவங்கள் விநியோகிக் கப்படுவதாக கூறியுள்ளார். (32)

# நோர்வேயும் ஐ.தே.கட்சியும் தான் கதிர்காமரின் கொலைக்கு பொறுப்பு

## - விமல்வீரவன்ச குற்றச்சாட்டு

லக்ஷ்மன் கதிர்காமர் கொலைக்கு நோர்வே அனுசரணையாளர்களும் ஐக்கிய தேசியக்கட்சியும்தான் பொறுப்பேற்க வேண்டும் என்று பேரினவாத ஜே.வி.பி. தலைவர் விமல்வீரவன்ச குற்றம்சாட்டியுள்ளார்.

குளியாப்பிட்டியவில் நடைபெற்ற கூட்டத்தில் விமல் வீரவன்ச மேலும் கூறியதாவது;யுத்த நிறுத்த உடன்படிக்கையை அரசாங்கம் மட்டுமே பின்பற்றுகிறது. இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் பல புலனாய்வு உறுப்பினர்கள், பொலிசார் படுகொலை செய்யப்பட்டு, இப்போது வெளிவிவகார அமைச்சரும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கண்காணிப்பு குழுவோ, மேற்கத் தேய நாடுகளோ இந்தக் கொலைகள் பற்றி ஒருவார்த்தையேனும் கூறவில்லை. எனினும் விடுதலைப் புலிகளுக்கு ஏதேனும் ஒரு சிறுபிரச் சினை ஏற்பட்டாலும் யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறப்பட்டுள்ளதாக கூறுகின்றனர். இன்று நாடு ஒருபுறம் விடுதலைப் புலிகளின் பொறியில் சிக்கியுள்ளது. மறுபுறம் கடன்வழங்கும் நிறுவனங் களின் பிடியில் சிக்கியுள்ளது. அவர்களினூடாகவே விடுதலைப் புலிகள் தங்களுக்கான சலுகைகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.நோர்வே தரப்பினரால் எவ்வித பயனும் இல்லை. இனி அவர்கள் போக வேண்டியதுதான் என்று சந்திரிகாவின் பிறந்த நாளில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியிருந்தார்.அன்று முதல் பலரது பிரதான இலக்காக லக்ஷ்மன் கதிர்காமர் மாறினார். வெளிவிவகார அமைச்சர் மீது ஐக்கிய தேசியக்கட்சி சேறு பூச ஆரம்பித்தது. வெளிவிவகார அமைச்சரின் மரணத்திற்கு நோர்வே உட்பட சமாதான வியாபாரத்தில் ஈடுபடும் மேற்கத்தேய நாடுகளும் ஐக்கிய தேசியக்கட்சியும் பொறுப்பேற்கவேண்டும் என்றார் அவர்.

# விடுதலைப்புலிகளுடன் பேசி இனப்பிரச்சினையைத் தீர்ப்பேன்

## *பிரதமர் மகிந்தராஜபக்ஷ*

சிறிலங்கா சனாதிபதியகத் தான் தேர்வு செய்யப்பட்டால் இலங்கை இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காண்பேன் என்று சுதந்திரக் கட்சி சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட் கிழமை சர்வதேச ஊடகமான அசோசி யேட் பிரஸ்ஸிற்கு அவர் அளித்த நேர்காணலில் மேலும் அவர் தெரிவிக்கையில்.;

நான் யுத்தத்தை ஆதரிக்க வில்லை யுத்தத்துக்கு எதிரான நபர் நான். நான் சனாதிபதியாகத் தேர்ந் தெடுக்கப்பட்டால் விடுதலைப்புலி களின தலைவர் பிரபாகரன் உள்ளிட்ட தலைவர்களை நேரடியாகச் சந்தித்து அமைதிப் பேச்சுக்களை நடாத்துவேன்

அனைத்து மதத்தினரையும் இனத்தையும் மதிப்பதுதான் எனது பலம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்பது எங்கள் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு விடயம்.சொந்த அரசியல் விருப்பு வெறுப்புக்களை விடுத்து இந்த நாட்டை வளர்த்தெடுப்பதற்கான புதிய அரசியல் கலாச்சாரத்தை உருவாக்க வேண்டியது அவசியம் என்றார் அவர்.

### நாகர்கோவிலில்..

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஆபத்துக்குள் ளாக்கக் கூடும். இந்த நிலையில் மிகவும் அவதானிப்புக் குரிய இந்த பிரதேசத்தில் இரு தரப்பினரும் மோதலுக்கு வழிவகுக்கின்ற ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை கைவிடவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். .(32)

### பாடசாலை..

யில், படையினரை பாடசாலைகளின் அருகிலிருந்து வெளியேற்றும்படி கோரி மாணவர்கள் ஒருநாள் பகிஷ்கரிப்பை மேற்கொள்ளும்படி திருகோணமலை மாவட்ட தமிழ் மாணவர் அமைப்பு வேண்டுகோள் விடுத்திருந்தனர். அதனை ஏற்றே மாணவர்கள் நேற்று திங்கட்கிழமை திருமலை நகரில் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தனர். (25)

### பிரதமர்...

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பன்னே கமுவவில் இவ்வாறு நடைபெறுவதனையிட்டு பிரதமரிடம் ஒரு வேண்டுகோளை முன்வைப்பதாக தெரிவித்த அவர், பிரதமர் நாட்டில் சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்தும் முன் அவரது சொந்த மாவட்டத்தில் நீதியையும் அமைதியையும் நிலைநாட்ட வேண்டும் எனக் கேட்டுள்ளார். (32)

### தமிழ்....

மற்றும் தமிழ் தேசிய எழுச்சிப்பிரகடனம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பிரச்சார நடவடிக்கைகளை கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளி.மகாவித்தியாலய மாணவ, மாணவிகள் இணைந்து நேற்று கிளிநொச்சி பொதுச்சந்தையிலும் மற்றும் கிளிநொச்சி நகர வர்த்தக நிலையங்கள் அனைத்திற்கும் குழுக்களாகச்சென்று மேற்கொண்டமையினை நேரில் காணக்கூடியதாகவிருந்தது.

மற்றும் வன்னி ரெக் தொழிநுட்ப நிறுவன மாணவ மாணவிகளால் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று தமிழ் தேசியத்தை சித்தரிக்கும் அரங்க நிகழ்வுகள் நடத்தப் பட்டன.

அதனைத்தைத்தொடர்ந்து மேற்படி மாணவர்கள் வீதிகளில் இறங்கி அரங்க செயற்பாட்டு விழிப் புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவன ஊழியர்களால் பூநகரி மகாவித்தியாலய மாணவர்களுக்கும் ஆணையிறவு உப்பள ஊழியர் களுக்கும் மற்றும் கிளிமாவட்டத்தில் பிரதேசங்கள் தோறும் தொகுதிதொகுதியாக கிராமங்களில் . வீடுவீடாக மக்கள் தரிசிப்புக்களை மேற்கொண்டு தமிழ் தேசிய எழுச்சி பிரகடனமாநாடு சம்பந்தமான கருத்துரைகளை வழங்கியதுடன் இதே செயற்பாடுகள் இன்றும் நாளையும் கிளிநொச்சி மாவட்டத்தில் சகல கிராமங்களிலும் முனைப்புடன் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

### கொழும்பில்....

மற்றும் கணனி இயக்குநரான சுப்பிரமணியம் சுதாஸ் (வயது-29) மேலும் அவ்வலுவலகத்திற்கு வருகைதந்திருந்த தீபம் தொலைக காட்சிசேவை ஊழியரான ஏ. எம். எம். ஆணாஸ் என்பவரும் காய மடைந்துள்ளனர்.

பாதுகாவல் நிலை சேதமடைந் துள்ளது. மேலும் அலுவலகத்தின் கண்ணாடிகள், காகிதாதிகள் சேதமடைந்துள்ளன. அங்கு நிறுத்திவைக் கப்பட்டிருந்த கார்,வான் போன்றனவும் சேதமடைந்துள்ளன.

தாக்குதல் நடத்தியோர் வெள்ளை வானில் வந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதே வேளை இரண்டு வாரங் களுக்கு முன்னர் இந்த பத்திரிகை நிறுவனத்தின் வெள்ளவத்தை கிளை அலுவலகத்தில் இனந்தெரியாதோரால் இரண்டு கைக்குண்டுகள் வைக்கப்பட்டிருந்து. பின்னர் பொலிசாரால் கைப்பற்றப்பட்டு செயலிழக்கப்பட்டதும் இந்நிறுவனத்தின் செய்தியாளர் ஒருவர் செய்தி சேகரிக்கச்சென்ற சமயம் ஜே.வி.பி.யினரால் தாக்கப்பட்டதும் தெரிந்ததே. (32)

### கழுத்தில்...

மதியப்பூசைகள் நடைபெற்று முடிவடைந்த நிலையில் பொது மக்கள் வீடு சென்ற பின்பு மேற்படி இளைஞன் தனியாக ஆலயத்தில் தரித்திருந்துள்ளார். அந்தச் சமயம் கடும் மழை பெய்ததனால் ஆலய உள்வீதியில் அதிக அளவு நீர்நிறைந்து காணப்பட்டதை கண்ட ஆலயக்குழுவினர் ஒருவர் நீரினை திறக்கச் சென்ற வேளை இரத்த வெள்ளத்தில் சடலம் கிடைப்பதைக் கண்டார். விடயம் அவரால் மற்றவர் களுக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து அனைவரும் சடலத்தை பார்வை யிட்டபின் வட்டக்கச்சி காவல் பணிமனைக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த காவல்பணிமனையினர் விசாரணையினை நடத்தியதை யடுத்து சடலம் சந்தேகத்திற்கிட மானதால் சடலத்தை கிளி/ மாவட்ட நீதியாளர் தேன்மொழி பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனை க்காக கிளி/ மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (12)

### சடலமாக...

திரவதைக்கு பின் கொல்லப்பட் டுள்ளனர்.

அதன் பின்னரே களுத்துறை வனப்பகுதியில் அவர்களின் சடலங் களை ஆயுதக்குழு வீசிச் சென்றுள்ள தாகவும் பொலிசார் தெரிவித்தனர்.


## பொதுமக்கள் பார்வைக்கு தமிழீழப் போக்குவரவுக் கழகம்

*01.09.2005 ஆம் நாள் நடைபெறும் தமிழீழ தேசிய எழுச்சி மாநாட்டினை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத் திலிருந்து தொடங்கும் அனைத்து பேருந்துப் பணிகளும் அன்றைய நாள் நடைபெறாது என்பதனை அறியத் தருகின்றோம்.*

முகாமையாளர்,
பேருந்துப்பகுதி,
கிளிநொச்சி.

(சி.12598)

## சாவு அறிவித்தல்

### பொன்னையா முருகேசு

புதுத்தோட்டம், நெல்லியடி கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த பொன்னையா முருகேசு காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா தெய்வானை ஆகியோரின் அன்பு மகனும், செல்லம்மாவின் அன்புக்கணவரும், கனகரத்தினம் (வளநாடன்) விஜயரட்ணம், குணரட்ணம், இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, ஆகியோரின் அன்புத்தந்தையாரும், ஜெயலஷ்மி, இராஜசெல்வி, சோதிமலர், துரைராசா, கந்தசாமி ஆகியோரின் அன்பு மாமனாரும், சஞ்சிகா, சரணிகா, சஞ்சீவன், அசுந்து, சங்கீலா, இராசேஸ்வரன், கரன், குரு, ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெற்று பூதவுடல் வேலொந்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:-
மகன்
மு.கனகரத்தினம்
(வளநாடன்)

(சி-12625)


**தமிழீழ விடுதலையே எங்கள் மூச்சு சர்வதேச சமூகமே இதைப் புரிந்துகொள்**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.